**நியதிகளும் நிபந்தனைகளும் - நேஷன்ஸ் RI$E வைப்புக் கணக்கு (ஐ.அ.டொலர்)**

1. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி (“வங்கி”) மூலம் வேறுவகையில் தீர்மானிக்கப்பட்டாலன்றி, நிலையான வைப்பு (“வைப்பு”) உயர்ந்தபட்சம் இரண்டு (02) ஆண்டுகளைக் கொண்ட உரிமைக்காலத்திற்கு குறைந்தபட்சம் பத்ததயிரம் ஐக்கிய அமெரிக்க டொலரை (ஐ.அ. டொலர் 10,000/-) மாத்திரம் வைப்பிலிட்டு ஆரம்பிக்கப்படக்கூடியது.

2. வைப்பானது அதன் முதிர்ச்சிக்கு முன்னர் முன்கூட்டியே மீளப்பெறப்படுமாயின், வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்ற விதத்தில் இணங்கிய வட்டி வீதத்தினைக் குறைப்பதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

3. வைப்பின் நாளாந்த மீதியின் மீது கீழே குறிப்பிடப்பட்ட வீதங்களில் வட்டி கணிக்கப்பட்டு முதிர்வுத் திகதி வரை மாதாந்தம் வரவுவைக்கப்படும்.

   ஆண்டு 1: ஆண்டுக்கு நிலையான 5%

   ஆண்டு 2: ஆண்டுக்கு LIBOR + 3.75% * (LIBOR நிறுத்தப்படுமாயின், மாற்று அடிப்படைஅளவு வீதமொன்று வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படும்)

   *இரண்டு ஆண்டுகளுக்காக, ஆண்டுக்கு 6.25% கொண்ட உயர்நதபட்ச வட்டி வீதத்துடன் ஆண்டுக்கு 4.5% கொண்ட உத்தரவாதமளிக்கப்பட்ட வட்டி வீதம்.*

4. வைப்பின் முதிர்ச்சியின் பின்னர் வட்டி எதுவும் ஒன்றுசேராது

5. நிலையான வைப்பு முதிர்ச்சியடைகின்ற போது, வாடிக்கையாளரினால் எழுத்து மூலம் பெயர்குறிக்கப்பட்ட கணக்கிற்கு முலதனம் மற்றும் வட்டி என்பன மாற்றல் செய்யப்படும் (வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு).

6. நிலையான வைப்பிற்கு எதிராக கடன்வழங்குதல், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாயிருக்கும்.

7. வங்கியினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் நிலையான வைப்புச் சான்றிதழ் கைமாற்றத்தகாதது.

8. இந் நியதிகளையும் நிபந்தனைகளையும் காலத்தற்கு காலம் திருத்துவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும். வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளுக்கமைவாக அத்தகைய திருத்தங்கள் பற்றிய அறிவித்தல் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

9. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அத்தகைய நோக்கத்திற்காக சட்டத்தினால் பதவிகுறிக்கப்பட்ட அத்தகைய வேறு அதிகாரியினால் விதித்துரைக்கப்பட்டவாறு வட்டிக் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி அல்லது ஏதேனும் வேறு செலுத்தற்படற்பாலதான வரி, வங்கி மூலம் கழிக்கப்படும். தொடர்புடைய அதிகாரியினால் பின்னர் கோரப்படமிடத்து, செலுத்தப்படாத வரிகளை வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டவாறான அத்தகைய விதத்தில் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

10. இதில் குறிப்பிட்டவற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் வேறு கண்கொன்றின் மீது அல்லது அத்தகைய பொறுப்புகள் உண்மையானதாக, அல்லது எதிர்பாராதவையாக, முதன்மையானதாக, அல்லது பிணைய உறுதியாக அத்துடன் பலராக அல்லது இணைந்தாக இருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி வேறு ஏதேனும் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு செலுத்தவேண்டிய ஏதேனும் தொகைக்கு/தொகைகளுக்கு எதிராக வாடிக்கையாளருக்கு அறிவித்தலின்றி வாடிக்கையாளரின் ஏதேனும் வேறு கணக்குடன் அல்லது வங்கிக்கான வாடிக்கையாளரின் எவையேனும் பொறுப்புகளுடன் வைப்பினை ஒன்றுசேர்ப்பதற்கு அல்லது

கூட்டிணைப்பதற்கு அத்துடன் வைப்பின் வரவில் உள்ள ஏதேனும் தொகையினை/தொகைகளை எதிரீடுசெய்வதற்கு அல்லது மாற்றல்செய்வதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

11. இறி நியதிகளையும் நிபந்தனைகளையும் (மேலே குறிப்பிட்ட வட்டி வீதங்கள் உள்ளடங்கலாக) காலத்திற்கு காலம் திருத்துவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

12. வேறுவகையில் உடன்பட்டாலன்றி, வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்கள் எழுத்து மூலம் வழங்கப்படும்.

13. இதில் உள்ளடங்கியுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக, வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மூலம் வாடிக்கயைாளர் பிணிக்கப்பட்டிருப்பார். இந் நியதிகள், நிபந்தனைகளுக்கும் வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளுக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், அத்தகைய ஒவ்வாமை என்ற ரீதியில் இந்நியதிகளும் நிபந்தனைகளும் மேலோங்கி நிற்கும்.

இதில் உள்ளடங்கியுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையம் வாசித்து விளங்கி அவற்றின் மூலம் பிணிக்கப்பட்டிருப்பதற்கு உடன்படுகின்றேன்.

வாடிக்கையாளரின் கையொப்பம்

…………………………………..

திகதி:

வாடிக்கையாளரின் கையொப்பம்

…………………………………..

திகதி:

வாடிக்கையாளரின் கையொப்பம்

…………………………………..

திகதி:

விசாரணைகள் மட்டும்